**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

**OS. No.76/2022**

சாட்சி -PW1

பெயர் - ஜேக்கப் பிரேமானந்த்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.07.2026.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து 82 செண்டில், 1716 சதுரடி தான் வா.சா.ஆ.1ல் கண்டுள்ளது என்றால் அதன் பின்னரும் பத்திரத்தில் 43 செண்ட் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. என் அப்பா செட்டில் மெண்ட் பத்திரம் 1970ல் எழுதினார் என்றால் சரிதான். என் அப்பா 22.03. 1989 ல் இறந்தார். வா.சா.ஆ.2 தான செட்டில் மெண்ட் ரத்து பத்திரம் கடந்த 27.05.2008 அன்று என் அம்மா தனிப்பட்ட முறையில் எனது அப்பா 12.06.1970 அன்று எழுதிய தான செட்டில்மெண்டை மேற்படி வா.சா.ஆ.2 முன்னிலைக்கு ரத்து செய்தார் என்றால் சரிதான்.

மேற்படி வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் எனது தகப்பனாரின் மற்ற வாரிசுதாரர்கள் அதில் தரப்பினராக இல்லை என்றால் 1970 தான செட்டில்மெண்ட் பத்திரத்திலேயே வாரிசுதாரர்கள் யாராகினும் ரத்து செய்யலாம் என நிபந்தனையுள்ளதால் எனது அம்மா ரத்து செய்தார். 1970 எனது அப்பா எழுதிய தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் நான் சொல்வது போல் வாரிசுதாரர்கள் யாராவது ஒருவர் ரத்து செய்யலாம் என எவ்வித நிபந்தனைகளும் காணப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அதில் யாரகிலும் ஒருவர் ரத்து செய்யலாம் என உள்ளது.

யார்கிலும் ஒருவர் என நான் சொல்வது போல் வாசகம் இல்லை என்பதால் தான் எனது அப்பா 1970ல் எழுதிய தான செட்டில் மெண்ட் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் நான் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 எனது அம்மா தான செட்டில் மெண்ட் ரத்து பத்திரத்தை அவர் நேரடி வாரிசு என்ற முகமையில் தான் பத்திரம் எழுதியுள்ளார்கள் என்றும், மற்ற வாரிசுதாரர்களுக்கும்

சேர்த்து எழுதவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தில் கண்டுள்ள முதல் சாட்சி வில்சன் என்பவர் என் தகப்பனாரின் தூரத்து உறவினர். அவர் தான் இந்த வழக்கின் வாதி மற்றும் எனக்கு இந்த வழக்கை பொது அதிகாரம் கொடுத்த அதிகார முகவர்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the July 09th 2026.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.07.10 14:56:17 +0600

Additional District Judge(FTC),
Vellore.